பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

03-2-1993

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 22 வியாழக்கிழமை (04-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 69

## நோயாளர் கப்பல் சேவை மீண்டும் மாத நடுப்பகுதியில்'

யாழ்ப்பாணம், பெப். 4

மூன்று மாத கால இடைவெளிக்குப் பின்னர் அவசர நோயாளர் கப்பல் சேவை இம்மாத நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து அவசர நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கு திருகோணமலைக்கும் இடையில் முன்னர் கப்பல் சேவை நடத்தப்பட்டு வந்தது தெரிந்ததே.

கடற்கொந்தளிப்பு காலநிலை சீரின்மை போன்ற காரணங்களால் இந்த சேவை கடந்த நவம்பர் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் "குமண" கப்பலில் இருந்து முழுமையாகப் பொருட்கள் இறக்கி முடிக்கப்பட்டதும் — மாத நடுப்பகுதியில் அக்கப்பல் மீண்டும் முதல் தடவை

(4ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரிகள் பயணம் செய்ய உடன் மாற்றுவழி செய்க!

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

உத்தியோக பூர்வ அலுவல்களின் நிமித்தம் குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ள அதிகாரிகளுக்கும் ஏனையோருக்கும் மாற்றுப் பிரயாண வசதி செய்யுமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், கூட்டுப் படைகள் தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வணிங்காவைக் கேட்டிருக்கிறார்.

உத்தியோக அலுவல்களின் நிமித்தம் இங்கு வந்து திரும்ப முடியாத நிலையிலும், மற்றும் இங்கிருந்து அவசர அலுவல்களுக்காக கொழும்பு செல்ல வேண்டிய நிலையிலும் சுமார் 40 பேர் வரை இங்கு காத்திருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

கப்பல் மூலமாக அவர்கள் இங்கிருந்து செல்ல அனுமதி வழங்குமாறு அவர் கூட்டுப் படைகள் தளகர்த்தரிடம் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமான தகவல் நேற்று கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. (உ-5)

## மாப்பிள்ளை அக்கரையில்! திருமணம் ஒத்திவைப்பு

திருமணத்திற்கு திகதி நிச்சயிக்கப்பட்டு விட்டது! ஆனால் மணமகன் கொழும்பு மறு கரையில் — அக்கரையில் காத்திருக்கிறார்!!

மணமகன் குறிப்பிட்ட திகதியில் இங்கு வர முடியாமல் போனதால் திருமண நாள் பிற்போடப்பட்டு விட்டது!!!

குடாநாட்டில் அண்மைக் காலத்தில் இவ்வாறு பல திருமணங்கள் ஒத்திவைக்கப்பட்டுவிட்டன என்று தெரியவருகிறது.

கிளாலிக் கடலில் போக்குவரத்து சீரில்லாததால், பெரும்பாலானோர் தமது பயணங்களை மேற்கொள்ள முடியாது கஷ்டப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில்—

திருமணம் மற்றும் வைபவங்களுக்கு அரிசி போன்ற முக்கிய பொருள்கள் கிடைக்காததாலும் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ஓ-72)

## பல்கலை. ஆசிரியர் போராட்டம் வெற்றி

### சம்பள உயர்வு அரசு வழங்கும்

கொழும்பு, பெப். 4

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம் அதன் தொழிற்சங்க நடவடிக்கையை உடனடியாகக் கைவிட்டது.

அமைச்சர் சாகுல் ஹமீத்துடன் சம்மேளனத் தூதுக்குழு ஒன்று நடத்திய பேச்சுகளைத் தொடர்ந்து, இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் படி பல்கலைக்கழக ஆசிரியர்கள் பொதுவான சம்பள அதிகரிப்புடன் அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீத உயர்வையும் பெறவிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபா நூல்களுக்கான அலவன்ஸ் பணமாக அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரியில் இருந்து பல்கலைக் கழக ஆசிரியர்களின் தரத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலும் பத்துச் சதவீதமாக இந்த அலவன்ஸ் அதிகரிக்கப்படும்.

நிறைவேற்றப்படாத பணிகளுக்காக வழங்கப்படும் அலவன்ஸ் தொகையும் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை வழங்கப்படும்.

மாற்றி அமைக்கப்பட்ட சம்பள விதம் 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அமுலுக்கு வரும். (உ-எ)

## தொழில் பதிவுச் சான்றிதழ் நாளை முதல் பெறலாம்

யாழ்ப்பாணம், பெப். 4

கரவெட்டி, பச்சிலைப் பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள் தமது பதிவுச்சான்றிதழ்களை கந்தர்மடத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

பின்வரும் நாட்களில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை உரிமையாளர்கள் நேரடியாக வந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்என்று கேட்கப்பட்டுள்ளது.

★ கரவெட்டி உ. அ. பிரிவு — நாளை.

★ பச்சிலைப்பள்ளி உ. அ. பிரிவு —, வடமராட்சி கிழக்கு, உ. அ. பிரிவு — நாளை மறுதினம். (உ-3)

### யாழ். அரச அதிபர் கொழும்புக்கு அவசரச் செய்தி

# குடாநாட்டுமக்கள் பட்டினிச் சாவில்; உணவுத் தட்டுப்பாடு உச்சத்தில்!

## தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடும் ஸ்தம்பிக்கும்?

யாழ்ப்பாணம், பெப்ரவரி 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடு உச்சகட்டத்தை அடைந்துள்ளது. அதனால் பட்டினியும், பஞ்சமும் தாண்டவமாடும் மிகவும் ஆபத்தான சூழ்நிலை தோன்றி இருக்கிறது.

பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவும் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பித்து போகும் நிலை உருவெடுத்திருக்கிறது. இது குறித்து இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் கொழும்பில் உள்ள தமது தலைமை அலுவலகங்களுக்கு தகவல் அனுப்பியுள்ளன.

இதேவேளை குடாநாட்டுககு அரிசி மற்றும் கூடுதல் உணவுப் பொருள்களை அனுப்பிவைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் கொழும்புக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அரிசி, மா, சீனி மற்றும் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. கடந்த சில நாட்களில் விலைகளோ பல்மடங்கு உயர்ந்துவிட்டன.

ஒரு கிலோ அரிசி 50 ருபாவுக்கு மேல் விற்கிறது. ஒரு கிலோ மா 20 ருபாவுக்கும் கிடைப்பது அரிதாக உள்ளது. சீனி, பருப்பு மற்றும் உணவுப் பொருள்களின் விலைகளும் மக்கள் வாங்கமுடியாத அளவுக்கு உயர்ந்துள்ளன. குழந்தைகள் பால்மா மணிக்குமணி விஷம் போல் ஏறி வருகிறது.

அதன்காரணமாக தொழில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## "யுக்திய" பத்திரிகை மீதும் அதிகாரிகள் "பாய்ச்சல்"!

கொழும்பு, பெப். 4

அரசுக்கு எதிரான கருத்துக்களை எழுதி வரும் மற்றொரு சிங்கள வார இதழான "யுக்திய" வும் நேற்று அரசு அதிகாரிகளின் பாய்ச்சலுக்கு இலக்கானது.

கடந்த திங்களன்று "ராவய" பத்திரிகை அலுவலகத்துக்குள் கூட்டாகப் பிரவேசித்த பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், அப்பத்திரிகையைச் "சீல்" வைத்து மூடப்போவதாக மிரட்டி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்கள் ஒப்படைப்பு?

மாதகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது, விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் சடலங்களை நல்லெண்ண அடிப்படையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் மூலம் அவர்களது உறவினர்களுக்கு அனுப்பிவைக்க விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பதாக அறியவருகிறது.

'குமண' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்ததும் சடலங்கள் பரிமாற்றம் குறித்து தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## ம. எண்ணெய் ஏற்றிவந்த 2 படகுகள் எரிந்து நாசம்

கிளாலிக் கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இரவு மண்ணெண்ணெய் ஏற்றி வந்த இரு படகுகள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் அவை தீப்பற்றி எரிந்து நாசமாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படகோட்டிகள் கடலில் பாய்ந்து நீந்தித் தப்பியதாகவும் தெரியவந்தது. [உ-15-117]

### ஸ்ரீலங்கா சுதந்திர தினமான

## இன்று விடுதலைப் புலிகள் தாக்கலாம் என எச்சரிக்கை

கொழும்பு, பெப் 4

சுதந்திர தினமான இன்று விடுதலைப் புலிகள் புதிய தாக்குதல்களை நடத்தலாம் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக ஆயுத படையினர் மற்றும் பொலிஸார் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

கொழும்பில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களை விமரிசையாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் — இதனை ஒட்டி தலைநகரில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. உ-எ-க-6)

## இந்திய கரையோரங்களில் புதிய பாதுகாப்புத் திட்டம்

### புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவாம்

சென்னை, பெப். 4

இந்தியக் கடற்கரைப் பாதுகாப்புக்கும், இந்திய மீனவர்களுக்கும் உதவுவதற்கென புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்றை மாநில அரசு மேற்கொண்டுள்ளது.

இதேசமயம் [illegible] புலிகள் கடற்பகுதியில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவே இப்புதிய திட்டம் செயலாக்கப்படுகிறது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியக் கடற்கரையில் கள்ளக்கடத்தல் நடப்பதைத் [illegible] பாதுகாப்புத் திட்டத்தின் நோக்கம் [illegible]

தமிழகக் கடற்கரையில் மட்டுமன்றி ஏனைய இந்தியக் கரையோரப் பகுதிகளிலும் கள்ளக் கடத்தல்கள் இடம்பெறுகின்றன என்றும்— எனவே தமிழக கரையோரப் பகுதியோடு ஏனைய கரைகளிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

### புதுக்குடியிருப்புச் சந்தியில்

## இரு தேச விரோதிகளுக்கு செவ்வாய் மரணதண்டனை

யாழ்ப்பாணம், பெப் 4

தேசவிரோதச் செயலில் ஈடுபட்ட இருவருக்கு விடுதலைப் புலிகள் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சந்தியில் வைத்து நேற்று முன்தினம் மேற்படி மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன.

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை நடராசா [38 வயது], புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிர்வேல் சுந்தரராசா [40 வயது] ஆகிய இருவருக்கே மரண தண்டனையை விடுதலைப் புலிகள் நிறைவேற்றினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள், உதவியாளர்கள் போன்றவர்களை இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வைத்து காட்டிக் கொடுத்தமை—

இயக்க முகாம்களை காட்டிக் கொடுத்தமை—

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளைக் கொல்வதற்கு திட்டமிட்டுச் செயற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 220 தபால் பொதிகளே 'குமண'வில் வருகின்றன!

பருத்தித்துறைக்கு இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "குமண" கப்பலில் 220 தபால் பொதிகள் மட்டுமே எடுத்துவரப்படுவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாட்டு, உள்நாட்டு தபால்கள் அடங்கிய ஆயிரத்து 200 தபால் பொதிகள் கொழும்பு தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாக அஞ்சல் அதிபர் நாயகம் கடந்த மாத ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து கொழும்பு சென்றிருந்த வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர், கொழும்பில் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதையடுத்து, தேங்கிக் கிடந்த சகல தபால் பொதிகளும் "குமண" கப்பல் மூலமாக அனுப்பப்படும் என உறுதி தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் குமண கப்பலில் 220 தபால் பொதிகள் மட்டுமே எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கடந்த தடவை "குமாரி" கப்பலில் 650 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டதும், ஆனால் 200 தபால் பொதிகள் மட்டுமே அதில் எடுத்து வரப்பட்டதும், பொதிகளில் தபாலகங்களுக்கு தேவையான காகிதாதிகள் வந்ததும் தெரிந்தவையே. (உ-3-5)

## ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ஆரம்பம்

சென்னை, பெப் 4

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை சென்னை - பூந்தமல்லியில் உள்ள விசேட நீதிமன்றத்தில் நேற்று ஆரம்பமானது.

நீதிமன்றம் அமைந்துள்ள சிறை வளாகத்துக்கு பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

26 எதிரிகளும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கு விசாரணை இம்மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன்—

அத்திகதி வரை எதிரிகளைக் காவலில் வைக்கும்படி சிறப்பு நீதிவான் எஸ். எம். சித்திக் உத்தரவிட்டார். (உ-எ)

### படையினர் கைப்பற்றிய

## வவுனியாப் பிரதேசத்துக்கு ராணுவ அதிகாரிகள் விஜயம்

கொழும்பு, பெப். 4

வவுனியாவிற்கு மேற்கே படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நான்கு கிராமப் பகுதிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கா, கூட்டுப் படைத் தலைமையகத்தின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா, வடபகுதி இராணுவத் தளபதி பிரிகேடியர் ரொஹான் தளுவத்த ஆகியோர் நேற்று முன்தினம் காலை விஜயம் செய்ததாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பகுதிக்கு புனொட் குழுவினரும் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

**உளவாளிகள்!!!**

**அவதானமாக இருக்கவும்.. ...!**

காரணமின்றிக் காத்திருப்பவர் காட்டிக் கொடுப்பவராய் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிவம் இன்டஸ்ரீஸாரின் வெளியீடுகள் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 4360)

## தேவை

பட்டுப்புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள, மாநகர எல்லைக்குள் வசிக்கும், 25—35 வயதுக்குட்பட்ட ஆண் வேலையாளர் தேவை. ஆர்வமுடையோர் 10-02-93க்கு முன்னர் சோபனா அடை அகம், 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமூகமளிக்கவும். (5770)

காசாளர் பதவிக்கு வேலையாள் தேவை. க.பொ.த. (உ/த) பயின்ற, மாநகர எல்லைக்குள் வசிக்கும், புடவை வியாபார அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. தேவையான சான்றுகளுடன் 10-02-93க்கு முன்னர் சோபனா அடை அகம், 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமூகமளிக்கவும். (5769)

புதிதாக ஆரம்பிக்கப்படும் புத்தகசாலைக்கு பெண் விற்பனையாளரும், எழுதுவினைஞரும் தேவை. மானிப்பாய் சுற்றாடலில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் 08-02-93க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 882, C/o உதயன். (சி-4217)

## மணமகள் தேவை

கனடா, அவுஸ்திரேலியா, U.K. போன்ற நாடுகளில் உள்ள எஞ்ஜினியர், எக்கவுண்டன் தொழில் புரிபவர்களுக்கு தகுந்த மணமகள் தேவை. சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனியில் தொழில் புரிபவர்களுக்கும், பெண்கள் தேவை. ஸ்பொன்சர் பண்ணி அழைக்கப்படும். சனி, ஞாயிறு, புதன் 9—2 மணிவரை. ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர். (24277)

## சதுரங்க வகுப்பு

தைப்பூச தினமாகிய 6-ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு சதுரங்க வகுப்புகள் ஆரம்பமாகின்றன. சேர விரும்புவோர், நேரில் வரவும். ஞானக்குழந்தை இல்லம், 49/5, யாழ் றோட், யாழ்ப்பாணம் (24267)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவில் இருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: இல. 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (5779)

## இலவச திருமண சேவை

35வயது செவ்வாய்8 ஆசிரியைக்கும், 6 வயது ஆசிரியருக்கும் அதே தரத்தில் மாற்றுச் சம்பந்தம் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. (24274)

31 வயது, பூரட்டாதி 2, Mechanical Engineer கலாநிதி மகனுக்கு அழகான B.Sc Maths மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில், விமலா, நாச்சிமார் கோவிலடி. (24273)

## மணமகன் தேவை

உதயத்தில் செவ்வாய் உள்ள, உத்திரட்டாதி நட்சத்திரம், பாவம் - 35, 31 வயதுடைய பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்கு அரச அல்லது கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் மணமகன் தேவை. இல 884, C/o உதயன். (5780)

## சோதிடம்

எத்தகைய கிரக பிரச்சினைகளுக்கும், தடைகள், கஷ்டங்களுக்கும் நிவாரணம் பெற சாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் அழைக்கிறது. பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர். (24278)

## பாடசாலையில் திருட்டு

கோப்பாய், பெப் 4

கோப்பாய் வடக்கு சரவணபவானந்தா வித்தியாசாலையில் ஞாயிறு இரவு அதிபர் அறையின் ஓடுகளைக் கழற்றி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த வாரம் கோப்பாய் நாவலர் பாடசாலையிலும் திருட்டு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ-72)

---

# பொது அறிவு

★ பாடப் புத்தகங்களைப் படித்துத் தேர்வில் சித்தி பெறலாம். அதன் பின் உத்தியோகம் தேடும் போது உங்கள் பொது அறிவையும் அளவிடுவார்கள். அதற்கும் உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

★ பொது அறிவை வளர்ப்பதை நோக்காகக் கொண்டு மலிவு விலையில் வெளிவரும் சஞ்சிகை:

**அறிவுக்களஞ்சியம்**

8ஆவது இதழ் விற்பனையாகிறது (சி/4218)

---

# கணக்கியல்

# A/L 92-ல்

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

**மீட்டல் வினா-விடை வகுப்புகள்**

ஆரம்பம்: 06 — 02 — 1993

சனி, ஞா. — 1 மணி

செ. வியா. — 11 மணி

ஆசிரியர்: SAM

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-4207)

---

# கலை, வர்த்தக கல்லூரி

# C C A

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)

யாழ்ப்பாணம்.

சனி, ஞாயிறு துரித மீட்டல் வினா விடை வகுப்பு

[92 A/L பரீட்சை எடுத்தவர்களுக்கான வார இறுதி வகுப்பு]

ஆரம்பம்: 06 02 — 1993

சனிக்கிழமை 12 00 மணி

- பொருளியல் — திரு உதயன்
- கணக்கியல் — திரு ஸ்ரீ
- வர்த்தகம் — திரு இரமணன்
- அளவையியல் — திரு சந்திரன்
- இந்துநாகரிகம் — திரு ஜோதீஸ்வரன்
- தமிழ் — திரு தங்கராஜா
- புவியியல் — திரு வேலாயுதபிள்ளை
- அரசியல் — திரு பஞ்சாட்சரம்

குறிப்பு: பகல்நேர வகுப்புகளுக்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது. ஆகையால் முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

- நிர்வாகி

(சி/4213)

---

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

# திறப்பு விழாவும்

"ராக பாவம்"

# நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்:- மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:- 06 - 02 - 1993 — 08 - 02 - 1993

நுழைவுச் சீட்டு:-
நாள் ஒன்றுக்கு: 500/-, 50/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

(சி-3920)

---

காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை
நீர்வேலி

சமூகத்தொண்டன் சி. தர்மலிங்கம்
ஞாபகார்த்த

# சமய பாடப் பரீட்சை - 1993

ஆண்டு 4 முதல் ஆண்டு 12 வரை

பாடசாலை மாணவர்களுக்கு வகுப்பு ரீதியாக வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் மேற்படி பரீட்சை 14 - 02 - 1993 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் 06 - 02 - 93க்கு முன் பரீட்சைக் குழுவுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கவும்.

தி. வேல்நம்பி
பரீட்சைக்குழு தலைவர்,

த. விக்னேஸ்வரன்,
பரீட்சைக்குழு செயலர்

(24291)

---

# லக்ஷ்மி இன்ஸ்ரிரியூட்

K. K. S. றோட், — சுன்னாகம்.

SPOKEN ENGLISH
WITH GRAMMAR
by BRITTO

புதிய பிரிவு - ஆரம்பம்: 05 - 02 - 1993
வெள்ளி — காலை — 9.00 மணி

## A/L DAY CLASSES

ஆரம்பம்: 09 - 02 - 1993 (செவ். காலை 8.30
(A/L 92 பரீட்சை எடுத்த மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்).

(24280)

---

# இன்று ஓராண்டு நினைவு

உடம்பு எடுத்தது: 04 — 05 — 1915



உடம்பை நீத்தது: 17 — 01 — 1992

## அமரர் P. M. இராசரத்தினம்

" இறந்த உடனேயே சுடுகாட்டிற்குச் சவ ஊர்வலம் ஆரம்பிக்கிறது. இருதயத் துடிப்புத் தான் அந்த இடத்திற்குச் செல்லும் ஊர்வலத்தின் மேளச் சத்தம். சிலர் அதிகச் சுற்று வழியில் செல்கின்றனர். சிலர் சீக்கிரம் செல்லும் வழியில் செல்கின்றனர். ஆனால் எல்லோரும் ஒரே இடத்திற்குத் தான் செல்கிறார்கள் "

- பாபா -
- அவதார மொழி அமுதம் -

அமரரின் நினைவாக விசேட பிரார்த்தனைகள்

தாவடி சமித்தியில் காலை 9-00 — 10-30 வரை விசேட பஜனை

இல்லத்தில் 10-45 — 12-00 வரை 'நாம பஜனை'

அனைவரும் கலந்து கொள்க!

திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்.

(24291)

---

சுன்னாகம் தாளையடி ஐயனார்

# புதிய உற்சவமூர்த்தி

# கும்பாபிஷேகம்

காலம் : 10 — 02 — 93 புதன்கிழமை
காலை 10-00 மணி

5-2-93 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு விக்கிரகம் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை பிரதான வீதி வழியாக ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டு வரப்படும். கும்பாபிஷேகக் கிரியைகள் 8-2-93 திங்கள் ஆரம்பமாகி நடைபெறும்.

பிரதிஷ்டா குரு :

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
(சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான பிரதமகுரு)

சி. ஐ. கந்தசாமி
ஆதீனகர்த்தாவும், பூசகரும்

சி. நாகரத்தினம் குடும்பம்
மல்லாகம்.
(உபயகாரர்)

(5804)

---

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடம்

## கணக்காளர் தரம் 104:7

மேற்படி பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவுத் திட்ட இல: 104:7

சம்பளம் — 1105—60×4 — 75×11—2170
இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்.

வயது — 40 வயதிற்குட்பட்டவர்கள்

தகைமைகள்:

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 8 ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் உள்ளகக் கணக்குப் பரிசோதகர்/கணக்குப் பதிவிலாளர்/கணக்கு அல்லது கணக்குப் பரிசோதகர் அலுவல்கள் சம்பந்தமாய் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு [6] வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது.

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டுப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமாய் மேற்பார்வை மட்டப் பதவியில் நாலு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க. பொ. த. உயர்தரம் கணக்கியல் உட்பட மூன்று (3) பாடங்களில் சித்தியுடன் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை சம்பந்தமாய் மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்பமுடிவு திகதி: 19 — 02 — 1993

சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தல் வேண்டும்

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு 19 - 02 - 93 திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

(சி-4337)

---

# அறிவித்தல்

பின்வரும் புதிய தொழில் பயிற்சிகளுக்குரிய விண்ணப்பங்கள் வழமையான விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் 15 - 2 - 93 அன்றோ அல்லது அதற்கு முன்போ அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

கல்வித் தகைமைகள் :- க. பொ. த. சாதாரண தரம் 6 பாடங்களில் சித்தி.

1. நீர் குழாய் கற்கைநெறி (254) பகல் 1 வருடம்
2. மேசன் கற்கைநெறி (251) பகல் 1 வருடம்
3. மின்னியலாளர் கற்கைநெறி (360) பகல் 2 வருடம்
4. மரப்பொறி இயக்க வல்லுநர் கற்கைநெறி (273) பகல் 1 வருடம்

— அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1993 - 02 - 02

(சி-4339)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட். யாழ்ப்பாணம்

92 பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கான

## துரித மீட்டல்

DAY CLASSE 8.00 — 2.00

ஆரம்பம்: 04 - 02—1993 (இன்று)

- பொருளியல் — திரு. கலாகரன்
- கணக்கியல் — திரு. எஸ். கே. பிரபாகரன்
- வர்த்தகம் — திரு. இரகுநாதன்
- அளவையியல் — திரு எ. பிரபாகரன்
- தமிழ் — திரு குழந்தை
- இந்துநாகரிகம், இந்து சமயம் — திரு காரை சுந்தரம்பிள்ளை
- புவியியல் — திரு. குணராசா
- அரசியல் — திரு. ஜெயகாந்தன்
- வரலாறு — திரு சிறிதரன்

செவ்., வியா., சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாட்களும் நடைபெறும்

(சி 4210)

---

# யாழோசையின்

இசை வகுப்புகள்

வீணை, வயலின், வாய்ப்பாட்டு ஆகியன எதிர்வரும் தைப்பூச தினத்தில் (06 - 02 - 1993) காலை 9மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன

தொடர்பு
61, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னம்மா செல்லப்பா

(காரைநகர்)

காரைநகர் பயிரிக்கூடலைச் சேர்ந்த செல்லப்பா பொன்னம்மா 03-02-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் வேலுப்பிள்ளை செல்லப்பாவின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம், புவனேஸ்வரி, சண்முகராசா, கமலாதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, வல்லிபுரம், நேசரத்தினம், சுந்தரலிங்கம், சுந்தரேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (04-02-1993) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நல்லூர் வைமன் வீதி 70/1 ஆம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சுந்தரலிங்கம்
(மகன்)

70/1 வைமன் வீதி,
நல்லூர்.

(24297)

செல்வி

## சிவஞானசம்பந்தர் கருணாநிதி

சரவணையைச் சேர்ந்த சிவஞானசம்பந்தர் கருணாநிதி 30-01-93 இல் சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் அன்னலெட்சுமியின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவானந்தன், குகானந்தன் (ஜேர்மனி), தயாநிதி (சுவிட்சர்லாந்து), கலாநிதி (இத்தாலி), அருணாநிதி (கனடா), வசந்தி (பாங்கொக்), சொர்ணாநிதி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகநாதனின் அன்பு மைத்துனியும், கீர்திகன், கார்திகன், சோதிப்பிரியா ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30 - 01 - 93 இல் சுவிஸில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தவராஜா.

73, பழம் றோட்
கந்தர்மடம்

[24289]

## திருமதி பரமபாக்கியம் இரத்தினசபாபதி

பரமபாக்கியம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், விஸ்வபாரததேவி, சிறிதரன் (U. K). சரோஜினி, (France), ஜெயக்குமார் (G rmany) ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துக்குமாரசாமி, பஞ்சனா, திலகா ஆகியோரின் அருமை மாமியும், திருமதி நளினி கமலேஸ்வரன், திருமதி ஷாமினி பரதன், தயாளன், சங்கர், லக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு பாட்டியும், அபிராமி, அருண், அச்சுதன், பிரவீணன், பிருந்தாபன், ஆகியோரின் ஆசைப்பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மானிப்பாய் மேதர்ஸ் லேன் இல்லத்தில் இன்று (4- 2- 1993) வியாழக்கிழமை காலை 9 30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
திருமதி பாராமுத்துக்குமாரசாமி
(மகள்)
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

165, மேதர்ஸ் லேன்,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

[24298]

## அந்தோனிப்பிள்ளை இராசையா

கொழும்புத்துறை வளன்புரத்தை வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை இராசையா அவர்கள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற எலிசபெத் அவர்களின் அன்புக் கணவரும், யேசுதாசன் (இளைப்பாறிய ஊழியர், பொதுசனநூலகம், யாழ்ப்பாணம்), மரியதாஸ் (யாழ் மாநகரசபை), பேக்மன் ஜெயராஜா (தொலைத்தொடர்பு கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), ஞானதாசன் ஜேர்மனி), அருள்ராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ஆரோக்கியம், திருமதி கமலா, திருமதி பவளம், திருமதி ராணி, சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மனுவேற்பிள்ளையின் சகோதரரும், யூலன் (டென்மார்க்), ஜோய் (நோர்வே), யயு (இந்தியா), வியு சுவிஸ்), ராயு (S. L. R. C. யாழ்ப்பாணம்), ராஜா (மாணவன், யாழ். பரியோவான் கல்லூரி), பாலன் (பிரான்ஸ்), ஜெயன் (பிரான்ஸ்), சுரேஸ் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி), ஜெயந்தி,ரஜனி, சுரேஸ் (சுவிஸ்). சுஜித்தா (மாணவி, யாழ் திருக்குடும்ப கன்னியர் தமிழ்ப் பாடசாலை), விஜிதா (மாணவி சென் அன்ரனீஸ் ம. வி.), உதயா (யாழ் திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலை), பிரதீபா மாணவி சுண்டுக்குளி மகளிர் பாடசாலை), கமல் (ஜேர்மனி) யறு (ஜேர்மனி), கவிதா (ஜேர்மனி), ரூபன் (ஜேர்மனி), சதீஸ் (ஜேர்மனி), சயன் (ஜேர்மனி), மாலபிறிச் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4.00 மணிக்கு 975/3, வளன்புரம இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
பேக்மன் ஜெயராஜா
மகன்)

வளன்புரம்,
கொழும்புத்துறை.

[24299]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

இளங்கலைஞர் மன்ற

# கலாமண்டபத் திறப்பு விழா நாளை மறுதினம் நடக்கிறது

யாழ்ப்பாணம், பெப். 4

நல்லூர் சட்டநாதர் வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, அகில இலங்கை இளங் கலைஞர் மன்றத்தின் கலா மண்டபம் நாளை மறுதினம் காலை திறந்து வைக்கப்படும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலா மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

திறப்பு விழாக் கிரியைகள் நாளை காலை நடைபெறும் அவற்றையொட்டி கொன்றையடி ஞான வைரவர் ஆலயத்தில் 108 சங்காபிஷேகம் இடம்பெறும்.

திறப்பு விழா நிகழ்ச்சிகள் சனிக்கிழமை காலை 9மணிக்கு துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆயர் அருட்திரு. வண. தோமஸ் சௌந்தரநாயகம், சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், யாழ். திவ்விய ஜீவன சங்கத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. சுகாலிங்கம், கொண்டலடி வைரவர் ஆலய தர்மகர்த்தா திரு. எஸ். பேரின்பநாதன் ஆகியோர் பங்குபற்றுவர்.

கவிஞர் திரு. கோ. பத்மநாதன், கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெறும்

மாலை நிகழ்ச்சிகள் பி.ப. 3 மணிக்கு பிரமஸ்ரீ ந. வீரமணி ஐயர் தலைமையில் நடைபெறும். மங்கள இசை பஜனை, இன்னிசைக் கச்சேரி, நாடகம்' வயலினிசை ஆகிய நிகழ்ச்சிகள் அப்போது நடைபெறும். (அ-111)

## நோயாளர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக நோயாளர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும்.

இம்முறை பருத்தித்துறைக்கும், திருமலைக்கும் இடையில் இரு சேவைகள் நடத்தப்படும் என்றும்—

கொழும்பில் சிகிச்சை பெற்றவர்களை அழைத்து வரவும், இங்கிருந்து நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (உ-3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 05 — 1928

மறைவு: 18 — 01 — 1992

## திருமதி நாகமுத்து இராசலிங்கம்

என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் நிதம் வாடும்;
கணவன், மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

கைதடி, நாவற்குழி தெற்கு,
கைதடி.

(24295)

# 1ஆம் ஆண்டு நினைவுகள்



வையத்துள்:
26 — 01 — 1920

நித்தியத்துக்குள்:
04 — 02 — 1992

## யேசடியான் சபாபதி மார்க்கண்டு

(முன்னாள் - தென்னிந்திய திருச்சபை ஊழியன்)

"என்ன நேரிட்டாலும் நாம் மனந்தளராமல் இருக்கிறோம். இந்தச் சரீரத்தில் குடியிருக்கும் வரை நாம் ஆண்டவனின் வீட்டுக்குத் தொலைவில் இருக்கிறோம் என்பதை அறிவோம்"

(உ. கொரி. 5, 6)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(அவுஸ்திரேலியா)

செ. செல்வத்துரை,
"செல்வபதி",
துன்னாலை வடக்கு,
[illegible]

(5741)

## சூடானாட்டு மக்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இழந்து, வருமானம் இன்றி ஏற்கனவே கஷ்டப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் ஒருநேர உணவுக்கும் வழியின்றிப் பட்டினி கிடக்கிறார்கள்.

உணவு நிலைமை நாளுக்கு நாள் மோசமடைவதால் பட்டினிக் கஷ்டம் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இதே வேளை—

சூடானாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஆபத்து நிலையை எட்டியிருப்பதால் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது — என்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அபாய அறிவிப்புச் செய்திருக்கிறது.

கொழும்பில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு நேற்று அனுப்பிய அவசர செய்தி ஒன்றில் முன்சொன்ன தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

சூடானாட்டில் 25 வீதமான மக்கள் ஏற்கனவே பட்டினி நிலையில் இருந்து வருகின்றனர். —

### வரட்சியும் பஞ்சமும்

இந்நிலையில் கடந்த பல மாதங்களாக உணவுப் பொருள்கள் வந்து சேராததாலும், மற்றும் மாவட்டத்தில் ஏற்பட்ட வரட்சி காரணமாக பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுவிட்டதாலும் சூடானாட்டில் பஞ்சநிலை தோன்றியுள்ளது—

பெரும்போக பயிர்ச் செய்கையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சிறுதானியப் பயிர்ச்செய்கையும் இம்முறை மேற்கொள்ளப்படவில்லை—

சிறுதானிய வகைகள் இல்லாததால் அரச சார்பற்ற நிறுவனங்களின் போசாக்குத் திட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது — என்றும்—

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அனுப்பியுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில்—

சூடானாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாடு நெருக்கடி நிலை பற்றி யாழ். மாவட்டத்தில் இயங்கும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் கொழும்பில் உள்ள தந்தமது தலைமை அலுவலகங்களுக்கு தகவல் அனுப்பியுள்ளன.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் யாழ். உணவு நிலவரம் குறித்து யாழ். அரச அதிபரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அதனைத் தொடர்ந்தே கொழும்புக்கு உணவு நிலை பற்றிய தகவல் அனுப்ப முடிவு செய்யப்பட்டதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் [illegible]

ஐக்கிய ராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், கெயார் இன்ரநாஷனல், றெட்பானா போன்ற நிறுவனங்களே கொழும்பில் உள்ள தந்தமது தலைமை அலுவலகங்களுக்கு செய்தி அனுப்பியுள்ளன.

### அரச அதிபர் அவசர கோரிக்கை

கூடுதல் அரிசி, மற்றும் பால்மா வகைகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரை அவசர செய்தி மூலம் கேட்டிருக்கிறார்.

சூடானாட்டில் எழுந்துள்ள உணவுத் தட்டுப்பாட்டு நிலைமையை அடுத்து, நேற்று யாழ். அரச அதிபர் இந்த அவசர கோரிக்கையை கொழும்புக்கு அனுப்பினார்.

அதிகளவான அரிசியையும், பால்மாவகைகளையும் தாமதமின்றி அடுத்து வரும் கப்பல்களில் அனுப்புமாறும் அவர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக் கேட்டிருக்கிறார்.

(அ-ஓ-5-164-15)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா சண்முகநாதன்

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிப் பகுதியைச் சேர்ந்த நடராசா சண்முகநாதன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நடராசா — செல்லம்மா தம்பதிகளின் மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், ஜெகநாதன் (இத்தாலி), திருமதி சரோஜினிதேவி - சூரியகுமாரன் (ஜேர்மனி), தேவநாதன், குலதேவ், லோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரியகுமாரனின் அன்பு மாமனாரும், கந்தசாமி, அன்னலட்சுமி, காலஞ்சென்ற ரெத்தினம், பொன்னம்பலம் (C. T. B. பரிசோதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராசமணி, ஆறுமுகம், செல்லத்துரை, ஞானேந்திரராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் திருநெல்வேலி கிழக்கு கேணியடி ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்;
மனைவி, மகள்

கேணியடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

(24301)

## ஜெகா செந்தில்நாதன்

(முன்னாள் அரசாங்க அதிபர் -
மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி)

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெகா செந்தில்நாதன் 31-1-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. ஜெகரத்தினம் - திருமதி ஜெகரத்தினம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரரும், சந்தானலக்ஷ்மியின் அன்புக்கணவரும், திருமதி செந்தில்மதி, செந்தில்செல்வி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஸ்ரீபதி (அவுஸ்திரேலியா)யின் அருமை மாமனாரும், திரு. திருமதி கனகரத்தினத்தின் அன்பு மருமகனும், தம்பிப்பிள்ளை (பொட்ஸ்வானா), கருணாகரன் (U. K.), திரிபுரசுந்தரம் (போமன் யாழ். மாநகர சபை), திருமதி சிவகுமாரி ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீஸ்கந்தனின் (தேசிய இளைஞர் சேவை மன்றம், கச்சேரி - யாழ்ப்பாணம்) சகலனும், திருமதி பரமேஸ்வரி, முத்துக்குமாரசாமி, திருமதி பவானி தம்பிப்பிள்ளை (பொட்ஸ்வானா), Dr. நல்லைநாதன் (கைதடி), சிற்சபாநாதன் (சவுதி அரேபியா), சத்தியநாதன் (தென்னாபிரிக்கா), கதிர்காமநாதன் (கிராமசேவையாளர்), கைலைநாதன் (பொட்ஸ்வானா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (4-2-93) காலை 9 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
திரு. கனகரத்தினம்
(மாமனார்)

30, ராதா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(24300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org